RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s759

OPEN ACCESS

# சமுதாய வீதி - சமூகச் சிந்தனைகளும் கலை உலகச் சிந்தனைகளும்

ஆ. இரமேஷ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி, சென்னை-600106, தமிழ்நாடு, இந்தியா.

# Community Street - Social Thoughts and Art World Thoughts

A. Ramesh [a, *]

[a] Department of Tamil, Dwaraka Doss Goverdhan Doss Vaishnav College, Chennai-600106, Tamil Nadu, India

* Corresponding Author:
rameshvimal5679@gmail.com

Received: 14-12-2021
Revised: 30-04-2022
Accepted: 07-05-2022
Published: 30-07-2022

Check for updates

## ABSTRACT

Community Street, this novel highlights the social issues faced by youth and artists who seek out big cities like Chennai. The film captures the challenges of artists facing every day as they seek opportunities to showcase their talents. The film portrays the social problems, sexual harassment and life problems faced by a female prospector. The great feelings and sufferings of a woman in the art world when she falls in love are shown in this novel. Art should be for art's sake. Beyond the two arguments that art should be for life, the essay on the way of creation explains that art and artists have changed for entertainment. Without complete antipathy, without losing the flavor of novelty, without missing society, it finishes with excitement and anticipation, and completes the reader. Only a limited number of narrators appear in this novel. Muthukumaran, whose name is Muthukumaraswamy Bawalar, Gopal, whose name is Gopalswami, Madhavi, Nair boy, Jiljil, Penang merchant Abdullah, Udaya Rekha, Rudrapati Reddy. Subjective Mandars Drama Mandars "The Love of a Cootie" The drama "The Love of a Cootie" created by a playwright named Muthikumaran, staged and performed at various venues in Malaysia. Interwoven between these events is the protagonist Muthukumaran-heroine Madhavi's love art, should it be for art? should it be for life? Art and life are entwined. Without complete opposite character, without losing the flavor of the novel, without missing the society, this novel completes with excitement and anticipation, and makes the reader satisfied.

**Keywords:** Samuthaya Veethi, Social Thoughts, Harassment, Social problems

## முன்னுரை

சமுதாய வீதி சென்னைப் பட்டணத்தைத் தேடிவரும் இளைஞனுடைய வாழ்வியலை ஒட்டி வெளிப்படுத்துவதாகப் பொதுவியலில் தொடங்கினாலும் ஒரு கலைஞனுடைய, ஒரு படைப்பாளியினுடைய வாழ்வியல் நிகழ்வைக் குறிப்பிட்டுப் பேசும் பொருண்மைக் கூறுகளால் கதை இயக்கத்தை நகர்த்திக் காட்டும் கதாசிரியரின் சிறப்பு பயனளிக்கக் கூடியதாகும். கதை மாந்தர் குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே இடம்பெறுகின்றனர். புறநிலையில் முத்துக்குமாரசாமி பாவலர் என்கின்ற பெயரைக் கொண்ட முத்துக்குமரன், கோபால்சாமி என்ற பெயரைக் கொண்ட கோபால், மாதவி, நாயர் பையன், ஜில்ஜில், பினாங்கு வியாபாரி அப்துல்லா, உதய ரேகா, ருத்ராபதி ரெட்டியார், அகநிலை மாந்தர்களாக "கழைக்கூத்தியின் காதல்" என்ற நாடக மாந்தர்கள் இடம்பெறுகின்றனர். இந்நாவலில் இடம்பெறும் சமூகச் சிந்தனைகளையும் கலை உலகச் சிந்தனைகளையும் வெளிக்கொணரும் வகையில் இவ்வாய்வு அமைகிறது.

## கதைக்கரு

சமுதாய வீதி என்ற புதினத்தில் முத்துக்குமரன் என்ற நாடக ஆசிரியரால் படைக்கப்படும் "கழைக்கூத்தியின் காதல்" என்ற நாடகம் படைத்தல், அதை அரங்கேற்றுதல், அதை மலேசியாவில் பல்வேறு இடங்களில் நடித்தல். இந்த நிகழ்வுகளுக்கு இடையில் இழையோடிய கதாநாயகன் முத்துக்குமரன்- கதாநாயகி மாதவியின் காதல்.

## புதினத்தின் கட்டமைப்பு தொடக்கம்

மதுரையிலிருந்து சென்னைக்கு வந்த கதாநாயகன் முத்துக்குமரன் தனது நண்பனும் முன்னணி நடிகராகவும் வலம் வரும் கோபாலின் வேண்டுகோளுக்கிணங்கி; கழைக்கூத்தியின் காதல் என்ற நாடகம் எழுதுவதில் தொடற்கிறது.

## உச்சம்

கதாநாயகன் முத்துக்குமரன் எழுதி வரும் கழைக்கூத்தியின் காதல் நாடகம் அண்ணாமலை மன்றத்தில் அமைச்சர், பினாங்கு வியாபாரி அப்துல்லா முன்னிலையில் அரங்கேற்றத்தில் வெற்றியடைந்து உச்சத்தை அடைகிறது.

## திருப்பம்

நாடகம் வெற்றிப் பெற்றதைப் பாராட்டி, நாடகத்தின் கதாநாயகன் கோபாலுக்கு மாலையை அணிவித்தார் அமைச்சர். அதைத் தொடர்ந்து புதினத்தின் நாயகன், நாடக ஆசிரியன் முத்துக்குமரனுக்குக் கோபாலின் வேண்டுகோளின் பெயரில் பினாங்கு வியாபாரி அப்துல்லா மாலை அணிவிக்கிறார். முத்துக்குமரனைப் பேசச் சொல்கிறார் கோபால். முத்துக்குமரன் பேசுகிறார். அவருடையப் பேச்சு புதினத்தின் ஓட்டத்தை வேறு திசைக்குத் திருப்பிவிடுகிறது. புதியதொரு எதிர்ப் பாத்திரமாகவே அப்துல்லா சித்தரிக்கப்படுகிறார். “நீ இரண்டு வார்த்தை பேச வாத்தியாரே” என்று முத்துக்குமரனுக்கு முன்னாள் மைக்கை நகர்த்தினான் கோபால். முத்துக்குமரனும் அப்போது நிகரற்ற அகங்காரத்தில் திளைத்திருந்தான். அவன் பேச்சும் அதை முழுமையாகப் பிரதிபலித்துவிட்டது. இப்போது இந்த மாலையை என் கழுத்தில் சூட்டினார்கள். எப்போதுமே மாலை சூட்டுவதையே வெறுப்பவன் நான். ஏனென்றால் ஒரு மாலையை ஏற்பதற்காக; அதை அணிபவருக்கு முன் நான் ஒரு வினாடி தலைகுனிய நேரிடுகிறது. என்னைத் தலைகுனிய வைத்து எனக்கு அளிக்கும் எந்த மரியாதையும் நான் விரும்புவதில்லை. நான் தலைநிமிர்ந்து நிற்கவே ஆசைப்படுகிறேன். ஒரு மாலையை என் கழுத்தில் சூட்டுவதின் மூலம் சாதாரணமானவர்கள் கூட ஒரு வினாடி என்னைத் தங்களுக்கு முன் தலை குனிய வைத்துவிட முடிகிறதே என்பதை நினைக்கும்போது வருத்தம். இந்த புதினத்தின் கதாநாயகனுடையப் பேச்சுப் புதினத்தின் திருப்பத்திற்குக் காரணமாகிறது.

## முடிவு

"நீ எனக்குப் பதிலா கோலாலம்பூரில் 8 நாடகமும் மலாக்காவில் மூன்று நாடகமும் ஆக மொத்தம் 11 நாள் வேஷம் கட்டி இருக்க. 11 நாடகத்துக்காகச் சேர்த்து 15 ஆயிரம் ரூபாய், நாடகத்தை எழுதியதற்காக 5000 ரூபாயும் சேர்த்து 20 ஆயிரத்திற்கு ஒரு செக் ராத்திரியே எழுதி வச்சேன் இந்தா" என்று கோபால் முத்துக்குமரனுக்குக் கொடுத்தான். முத்துக்குமரனும் மாதவிக்கு உரிய பணத்தைக் கேட்டு 20 ஆயிரம் பெற்றான். அடுத்த வெள்ளிக்கிழமை குருவாயூரில் எனக்கும் அவளுக்கும் கல்யாணம் என்று கூறுவதோடு முடிவுக்கு வந்து; முத்துக்குமரன்-மாதவி காதல் மொழிகளோடு நிறைவுப் பெறுகிறது இப்புதினம்.

## பாத்திரப்படைப்பு கதாநாயகன்

தன்னம்பிக்கை, தன்மானம், கௌரவம், கர்வம் இவை எல்லாம் தனக்கே உரிமை உடையவனாய், செம்மார்ந்த அறிவும் தெளிவும் மிக்கப் புலமையும் அனைவராலும் கவரப்படும் அழகும் உடல் தோற்றமும் உடைய கதாநாயகன் முத்துக்குமரன் நட்பிற்காக எதையும் செய்யும் நாயகன் காதலனாகும் கவிஞனின் கவிப்பெருக்கும், காதலியின் உணர்ச்சிப் பெருக்கும் இணைந்து சமுதாய வீதியைச் சமூகத்தோடு இணைத்து விடுகிறது.

## கதாநாயகி

தைரியம், எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் ஆற்றல், பெண்மைக்கே உரிய வனப்பு, நடிகையாக இருந்து எதிர்கொள்ளும் புகழும், அதனோடு இணைந்து வரும் சீண்டல்களும், காதலனுடன் இணைந்து பயணப்படும்போது எதிர் கொள்ளும் உணர்வு மோதல்களும், உணர்ச்சி ரணங்களும் கொண்டமைந்த கதாநாயகி மாதவி. "நான் அபலை, என்னைத் தொடறவங்களை எல்லாமே நானும் தொட விரும்பறதா நீங்க நினைச்சுக்கக் கூடாது." என்று மாதவி பேசுவதிலிருந்து கலை உலகம் பெண்களை எப்படி நடத்துகிறது என்பதை அறிய முடிகிறது (Parthasarathy, 1987).

## எதிர்நிலை கதாபாத்திரம் - 1. கோபால்

புகழின் உச்சத்தில் பறந்துகொண்டு, புகழினைத் தக்கவைத்துக் கொள்வதிலும் பணத்தைச் சேர்த்து சேமிப்பதிலும் கவனம் கொள்ளும் கதாபாத்திரமாக இருக்கும் கோபால்: கதாநாயகன் முத்துக்குமரன் கொண்ட நட்பிற்கும், தோழமையினால் பழகிய அதிகாரத்திற்கும் ஆட்பட்ட நிலையில் படைக்கப்பட்ட எதிர்நிலைப் பாத்திரம். அந்நிலையிலிருந்து குணச்சித்திரப் பாத்திரமாக மாறுவதும் மாற்றியிருப்பதும் ஆசிரியரின் ஆளுமையைக் கட்டமைத்துக் காட்டுகிறது.

## முதல் கடிதம்

அன்புள்ள முத்துக்குமார் என்னுடைய செயலைத் தவறாக நினைக்காமல் இதனுடன் இருக்கும் ஆயிரம் ரூபாயைச் செலவுக்கு வைத்துக்கொள். சமயத்தில் நான் ஊரில் இல்லாவிட்டாலும் யாரிடம் கேட்பது? எப்படி கேட்பது? என்று புதிய ஊரில், புதிய இடத்தில் நீ செலவுக்குத் திண்டாடக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன் இதை உனக்குக் கொடுத்து அனுப்புகிறேன்" என்று எழுதி கீழே கோபால் என கையொப்பமிட்டு இருந்தான். இது இவன் நட்புக்கு செய்கின்ற செயலாகும் (Parthasarathy, 1987).

## இரண்டாவது கடிதம்

“அன்பிற்குரிய முத்துக்குமரனுக்குக் கோபால் எழுதியது. நீ மாதவியின் முன்னிலையில் என்னை எடுத்தெறிந்து பேசுவது, கேலி செய்வதும், கண்டிப்பதும் உனக்கே நன்றாய் இருந்தால் சரி. என்னிடம் அடங்கி வேலை செய்பவர்களுக்கு முன்னால் நீ என்னை அவமானப் படுத்துவதை நான் விரும்ப முடியாது. அதை உன்னிடம் நேருக்குநேர் சொல்ல நினைத்தும்; தயக்கத்தினால் எழுதி அனுப்ப நேரிடுகிறது. இதை நீ புரிந்துகொண்டால் நல்லது. நாடகத்தை எழுதி இருப்பது நீ என்றாலும் அதை நடத்தவும் நடிக்கவும் போகிறவன் நான்தான் என்பது நினைவு இருக்க வேண்டும் (Parthasarathy, 1999).

இரண்டாவது கடிதத்தில் தன்னுடைய கௌரவம் சிதையாமல் காத்துக்கொள்ள வேண்டும் என்பதும், தன்னுடைய அந்தஸ்து குறையாமல் இருக்க வேண்டும் என்பதையும் தெளிவுபடப் பேசுகிறான் கோபால்.

## பினாங்கு வியாபாரி அப்துல்லா

மலேசிய நாட்டில் இருந்து வந்து சென்னையில் கழைக்கூத்தியின் காதல் என்ற நாடக அரங்கேற்றத்தில் அமைச்சருடன் பங்கேற்கும் அப்துல்லா நாடகத்தின் சிறப்பைப் பாராட்டி, மலேசிய நாட்டிற்கு அழைத்துச் சென்று பல்வேறு இடங்களில் காட்சிப்படுத்தும் குணச்சித்திரகப் பாத்திரமாக இடம்பெறும் அப்துல்லா; கதாநாயகியின் மீது மோகம் கொண்டு கதாநாயகனுக்கு எதிராக நடந்து கொள்ளும்போது வில்லனாகவே இயக்கம் பெறுவது சிறப்புற படைக்கப் பெற்றுள்ளது.

குணச்சித்திரம் பழமையின் வாழ்வியலை என்றும் மறவாமல் பழக்கம் உடையவர்களைப் பாசத்தோடு அரவணைக்கும் ருத்திரபதி ரெட்டியார்.

## முன்னோக்கு உத்தி

"மதுரை கந்தசாமி வாத்தியாரின் கானா முதல் நாடக விநோத நாடக சபா" கதாநாயகனின் நினைவாகச் சிறிதும், கதாநாயகியின் பின்புலமாக அவள் குடும்பச்சூழல் மிகச்சிறிய வடிவில் வசனங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

## சமுதாய வீதி சமூகத்திற்குக் கூறும் செய்திகள்

"வெளிச்சம் அதிகமாக இருக்கிற சிறிய வாழ்வு கூடப் பெரியதாகத் தெரியலாம். வெளிச்சம் குறைவாக இருக்கிற இடத்தில் பெரிய வாழ்வு கூடச் சிறியதாய் மங்கிப்போகலாம்" (Parthasarathy, 2020).

கிராமத்தில் வாழ்கின்ற அறிவாளிகளின் அறிவு வெளிப்படுத்தப்பட்டுப் பெறும் சிறப்பு குறைவு என்பதும், அதைவிடக் குறைவான அறிவு படைத்தோர் வசதிபடைத்தவர்களும் வசதி வாய்ப்புகளுடன் நகரத்தில் இருக்கும் போது உலக மக்களால் கொண்டாடப்படுவதும் உலக இயல்பாகிவிட்டது. இதை ஏழை, பணம் படைத்தோரிடமும் இந்த வேறுபாட்டைக் காண்கிறோம். "சமூகத்தின் மேற்படிகளில் பணம் படைத்தவர்களும் புகழ்ப் படைத்தவர்களும் தான் சக்கரவர்த்திகளாக இன்னும் அமர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் மறந்து விட்டீர்கள் போலிருக்கிறது" என்ற செய்தி இன்றையச் சமூகத்திலும் பணம், பணப்பரிந்துரை, இனப் பரிந்துரை, சாதிப் பரிந்துரை, என அனைத்துத் துறைகளிலும் போராடிக் கொண்டிருப்பதைச் சமுதாய வீதி எடுத்துக்காட்டி விளக்கிச் செல்கிறது (Parthasarathy, 1987). "அதிகாரம் படைத்தப் பதவிகளில் ஒரு குறிப்பிட்ட இனத்தவர், ஒரு குறிப்பிட்டச் சாதியினர் இருப்பதை இன்றளவிலும் காணமுடிகிறது. சமூகத்தில் நாகரீகமடைந்த வீதிகள் எல்லாம் அழகாகவும் அலங்காரமாகவும் பட்டினத்தில் தோன்றினாலும்; அந்த வீதிகளின் வீடுகளில் ஆற்றல் நிறைந்த சந்தர்ப்பவாதிகளும், கொடியவர்களும், ஆதரவற்ற நியாயவாதிகளும், நல்லவர்களும் முறை மாறி, சரிசமமற்ற பலத்தோடு நிரந்தரமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்" என்று சமூகத்தில் மறைவாகவும் மறைக்கப்பட்டும் வருவதை இந்த புதினம் மக்கள் என்ற வீதிக்குக் கொண்டுவந்து காட்டுகிறது. "சமுதாயத்தில் புத்தி உள்ளவர்களாக தங்களைக் கருதிக் கொள்கிறவர்கள் சிந்தித்துக் குழம்பி, தயங்கிக் கொண்டிருக்கிற ஒரு காரியத்தைப் புத்திக் குறைவாகவும் சமயோசித ஞானம் அதிகமாகவும் உள்ளவர்கள் செய்து முடித்துவிடுகிறார்கள்." இங்கு புத்திப் பயனற்றதாகி விடுகிறது. சமயோசித ஞானம் வென்று விடுகிறது (Parthasarathy, 1987).

பணம், வசதி என்ற பூகம்பத்தில் சில மேடுகள் உண்டாகின்றன. அந்த மேடுகள் உண்டாவதனாலேயே அதைச் சுற்றி இருந்த இடங்களெல்லாம் பள்ளம் ஆகிவிட நேரிடுகிறது. பள்ளங்கள் உண்டாக்கப் படுவதில்லை; மேடுகள் உண்டாகும்போது. இது இயல்பான வாழ்க்கையைச் செயற்கை தன்மைக்கு மாற்றும் போது, அதன் விளைவுகள் மனயியல் சிதைவைத் தூண்டுகிறன. இந்திய மக்கள்தொகையில் மிகச் சிலரே வசதி வாய்ப்புகளை அனுபவிக்கும் பணக்காரர்களாக இருப்பதும், மற்றவர்கள் வசதி வாய்ப்புகளை உருவாக்குவதிலேயே நிறைவடைந்து விடுவதும், சிலர் வசதி வாய்ப்புகளைத் தேடிக் கொண்டிருப்பதும். பலர் அதை அறியாமலேயே மறைந்துவிடுவதும்,

மேடுகளை- பணக்காரர்களை அண்ணார்ந்து பார்க்கிறவர்கள் உருவாகுவதில்லை; அவர்கள் உருவாக்கப்படுகிறார்கள் என்பதையும் புதினத்தின் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

## தனி மனிதனுக்குரியச் சிந்தனைகள்

மனிதனோட உயர்ந்த மொழி பிறரிடம் பெருந்தன்மையாக நடந்து கொள்ளும் போதுதான் பேசப்படுகிறது. அது தெரிந்தாலே போதும். அது தெரியாதவர்களுக்கு எத்தனை மொழிகள் தெரிந்தாலும் பயனில்லை. துக்கப்படுகிற போது இரண்டு சொட்டுக் கண்ணீரும், சந்தோஷப்படறபோது ஒரு புன்னகையும் பதிலாக எங்கிருந்து கிடைக்குமோ அங்கேதான் எல்லா மொழிகளும் புரியற இதயம் இருக்கு என்று முத்துக்குமரன் வாயிலாக புதினத்தின் ஆசிரியர் உணர்த்துவது மனிதத்தின் எதிர்பார்ப்பு இவ்வளவே என்பதை எடுத்துக்காட்டுகிறது. இதைத் தாண்டியவை எல்லாம் தேவை என்பதில் தொடங்கி சுயநலம், பேராசை, வசதிவாய்ப்பு, காமம், கோபம், திருட்டு, அபகரிப்பு, அராஜகம், பதவி, பணிவு போன்றவற்றைக் கட்டமைத்து; மனிதனைத் தூக்கி எறிந்து விடுகிறது. "முத்துக்குமரனுக்கு ஒவ்வொரு வினாடியையும் தன் வாழ்க்கைக்காகப் பயன்படுவதை விட்டுவிட்டு; ஒவ்வொரு வினாடிக்கும் தகுந்தாற்போல் தன்னை மாற்றிக் கொள்வது சிரமமாகத்தான் இருந்தது" என்று குறிப்பிடுவது மனிதனின் இயற்கைச் சூழலைக் கட்டமைத்துக் காட்டுகிறது (Parthasarathy, 2020). இடம் மாறும்போதும் மனிதர் மாறுபடும்போதும், வேறுபடும்போதும் அவர்களோடுப் பயணிக்கும்போதும் தனக்கானச் சூழல், வாழ்க்கைகட்டமைப்பு மாற்றியமைப்பது கட்டாயமாக்கப் பட்டுவிடுகிறது என்பதை வெளிப்படுத்திக் காட்டுகிறது.

## கலையுலகம்

கலை உலகின் எதார்த்தங்களைக் கருப்பொருளாகக் கொண்டுள்ள புதினம், "நல்லதைக் காப்பாத்த யார் ஆசைப்படுறாங்க பணத்தைக் காப்பாற்றிக் கொள்ளத்தான்; இப்போ எல்லாருமே ஆசைப்படுறாங்க" என்ற வசனம் இன்றையச் சூழலை வெளிப்படையாகப் பேசுகிறது (Parthasarathy, 1987). கலையின் எந்தத் துறையிலும் குறைவான ஆத்ம வேதனையும் அதிகமான ஆசையும் உடையவர்களே நிறைந்து தென்படுவதைச் சென்னையில் காண்கிறான் முத்துக்குமரன்" என்று கலைத்துறையினருக்கு உரிய குறைகளைச் சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர்.

## மனநிலை

ஏதாவது ஒரு முன்னணி நடிகருடைய பணமும் புகழும் கார்களும் பங்களாக்களுமே முன்னணிக்கு வராத ஏழை உப நடிகனின் கனவில் இருந்து கொண்டுத் தூண்டினவே தவிர உழைப்பின் முனைப்போ, திறமை அடைய வேண்டுமே என்ற ஆர்வமோ தூண்டவில்லை என்று கலைத்துறையினரில் துணை நடிகர்களின் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார். கலையைக் காப்பாற்றுவதற்காக யாருமே பட்டினத்துக்கு வரமாட்டாங்க. வயித்தைக் காப்பாத்திக்கிறத்துக்காகத் தான் வருவாங்க, வந்திருக்கிறாங்க (Parthasarathy, 1987). "கலை கலைக்காகவே" என்ற கோட்பாடு கொஞ்சம் கொஞ்சமாக மாறி கலை வயிற்றுக்காகவே என்று மாறி வரும் நிலையைப் புதின ஆசிரியர் வெளிப்படுத்தி இருப்பது இந்த நிலைமாற வேண்டும், எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும். கலைஞர்கள் கலைக்காகவே வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் புதினத்தில் வெளிப்படுவதை அறியமுடிகிறது.

சமூகத்தின் ஒவ்வொரு துறையும் இன்றைக்கு ஒரு பெரிய வீதியாக நீண்டு இருக்கிறது. அவற்றில் சில வீதிகளில் நடந்து செல்பவர்களுக்குப் பாதுகாப்புக் குறைவு. பிரகாசம் அதிகம். சமூகத்தின் இருண்ட வீதிகளில் நடப்பதை விட அதிகமானத் திருட்டுகளும் வழிப்பறிகளும் பிரகாசமான வீதிகளில் தான் மிகுதியாக நடைபெறுகின்றன. பிரகாசங்களின் அடியில்தான் அந்தகாரம் - இருள் வசிக்கிறது. கலையுலகம் என்ற வீதி இரவும் பகலும் பிரகாசமாக மின்னுகிறது. புகழ் மற்றும் வசதிகளால் மின்னுகிறது. ஆனால் இதயங்களால் மின்னவில்லை. எண்ணங்களின் பரிசுத்தத்தால்

மின்னவில்லை. அந்த வீதியின் பிரகாசத்தில் மிக வனப்புடைய பலருடைய சரீர அழகும், மன அழகும் மௌனமாகவும் இரகசியமாகவும் பலியாகிக்கொண்டே இருக்கின்றன. கலை ஒரு பெண்ணின் வயிற்றுக்கும் வசதிக்கும் பாதுகாப்பு அளிக்கிறதே ஒழிய; உடம்பிற்கும் அதன் கற்பிக்கும் பாதுகாப்பு அளிப்பதில்லை.

## முடிவுரை

சமுதாய வீதி என்ற புதினத்தின் வாயிலாக அதைப் படைத்த நா. பார்த்தசாரதி என்ற எழுத்தாளரின் நோக்கத்தை அறியமுடிகிறது. கதாநாயகன் - முத்துக்குமரன் என்ற பாத்திரத்தின் வாயிலாக இந்த சமுதாயத்தின் மன இயல்புகளை அறியப்படுவதோடு ஏற்றத்தாழ்வுகள் உண்டாக்கப்படுகின்ற செயற்கையை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம். இக்கட்டுரை ஒரு பெண்ணின் அன்பும் ஆசையும் எவ்வளவு தூரம் நிராகரிக்கப்படுகிறது என்பதையும், அவள் ஒரு நடிகையாக இருக்கும் நிலையில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும் இந்த புதினத்தின் கதாநாயகி மாதவியின் வாயிலாக அறிய வைக்கிறது. எதிர்நிலையில் படைக்கப்பட்ட கோபால் என்ற பாத்திரம் புகழுக்கும் நட்பிற்கும் ஊடாடும் பாத்திரமாகப் படைக்கப்பட்டிருக்கிறது. தன்னுடைய கௌரவத்திற்கும் புகழுக்கும் குறை ஏற்படுவதாக உணரும் போதெல்லாம் கடிதங்களின் வாயிலாகக் கதாநாயகனோடுப் பேசும்போதும் குணச்சித்திர நடிகராகவே மாறிப் போவதை இக்கட்டுரை விளக்குகிறது. கோபால் என்ற எதிர்பார்த்ததற்குத் துணைப் பாத்திரமாக விளங்கும் அப்துல்லா குணச்சித்திரப் பாத்திரமாகவே இருந்து கதாநாயகி மீது கொண்ட சபலத்தால் எதிர்ப்பாத்திரமாக மாறுவதை இக்கட்டுரை எடுத்துப் பேசுகிறது. கலை என்பது கலைக்காகவே இருக்க வேண்டும். கலை வாழ்க்கைக்காகவே இருக்க வேண்டும். இந்த இரண்டு வாதங்களையும் தாண்டி கலையும் கலைஞர்களும் வயிற்றுப்பிழைப்புக்காக மாறி இருப்பதைப் படைப்பின் வழிக் கட்டுரையில் விளக்கப்பெற்றுள்ளது. முழுமையான எதிர்ப்பாத்திரம் இல்லாமல் புதினத்தின் சுவைக் குன்றாமல் சமுதாயத்தைத் தவறவிடாமல் சுறுசுறுப்பும் விருவிருப்பும் கொண்டு எதிர்பார்ப்பைத் தூண்டி வாசகனை நிறைவடையச் செய்து நிறைவடைகிறது இப்புதினம்.

## References

Parthasarathy, N., (1987) Samuthaya Veethi, 9th Edition, Tamil Puthakalayam, Chennai, India.

Parthasarathy, N., (1999) Samuthaya Veethi, 13th Edition, Tamil Puthakalayam, Chennai, India.

Parthasarathy, N., (2020) Samuthaya Veethi, Vaasippom Publications, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License